**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C. No. 129/2025**

**Deposition of Witness for Complainant PW2**

**திரு. நடராஜன் த/பெ. கொங்காகவுடர் வயது. 65 ஊர். பில்லிக்கம்பை**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**17.08.2026 Witness Signature :**

**PW2 குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி 04.00 P.M**

1. எனது மகன் சம்பவத்தன்று எங்கு சென்றுவிட்டு வந்தார் என்று எனக்குத் தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் சம்பவத்தன்று எங்கு சென்று வந்தேன் என்றால் அன்றைய தினம் திங்கட்கிழமை கோவிலுக்கு பூ வைத்துவிட்டு வெளியே வந்தபோது சமுதாயக் கூடத்தில் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அங்கு வேறு யார் இருந்தார்கள் என்றால் வேறு யாரும் இல்லை. எதிரியின் கூச்சல் சத்தம் கேட்டுதான் அங்கு சென்றேன். என் மகனின் கூச்சல் சத்தம் கேட்கவில்லை. கோவிலுக்கும் சமுதாய கூடத்திற்கும் சுமார் 100 அடியிலிருந்து 200 அடி தூரம் இருக்கும். நான் அங்கு சென்று பார்த்தபோது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் பெள்ளிராஜும் எனது மகன் மட்டும்தான் இருந்தார்கள். பெள்ளிராஜ் எங்கிருந்து வந்தார் என்று தெரியாது. அது இருட்டான நேரம் என்றால் சரிதான்.

2. எதிரியின் வீடு பக்கத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். நஞ்சன், அர்ஜீனன் வீடு பக்கத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் யாரும்

வந்து சம்பவ இடத்தை பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நானும், என் மகனும், பெள்ளிராஜும் பேசிக்கொண்டிருக்கும்போது எதிரி அவரது வீட்டிற்கு போய் கத்தி எடுத்துக்கொண்டு வந்து குத்த வந்தார். எதிரியின் மகன், மருமகள் யாராவது வந்தார்களா என்றால் வரவில்லை. நான் தடுக்கவில்லையா என்றால் தடுத்தேன், எதிரி என்னை தள்ளிவிட்டுவிட்டார். இதை எனது போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன். பெள்ளிராஜ் தடுத்தாரா என்றால் தடுப்பதற்கு முன் சம்பவம் நடந்துவிட்டது. போலிஸ் விசாரணையில் என் மகனுக்கு எந்தெந்த விரல்களில் காயம்பட்டது என்று கூறியுள்ளேன்.

3. எனது மகன் விவாகரத்தாகி இருந்ததாலும், எதிரியின் மகன் மனைவி மக்களுடன் இருப்பதால் மனவருத்தம் இருக்கலாம். நான் கோத்தகிரி மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னையும், என் மகனையும் விசாரித்தார்கள். நடந்த விவரத்தை சொன்னேன். கையெழுத்து வாங்கினார்கள். அதற்கு பின் இன்றுதான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் முதல் விசாரணைக்கு பின் இன்றுதான் சாட்சியம் அளிக்கிறேன். நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எதிரியின் மகனுடன் என் மகனை சேரவேண்டாம் என்று கூறியதால் என் மகன் கம்பிவேலியில் கையை கிழித்துக்கொண்டு பொய்யான புகார் கொடுத்ததற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 17.08.2026
Judicial Magistrate,
Kotagiri